# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண் 253/மா/2025
நாள் 11.08.2026

V. சித்திக், சென்னை --- முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர், மண்டலம் 3
பெருநகர சென்னை மாநகராட்சி --- எதிர் மனுதாரர்

சென்னை–600 118, கொடுங்கையூர், முதல் மெயின் ரோடு, நாராயணசாமி கார்டன், கதவு எண் 2/3 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. V. சித்திக் என்பவரின் 09.07.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 10.07.2025 அன்று பெறப்பட்டு 253/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை

சென்னை–600 118, கொடுங்கையூர், முதல் மெயின் ரோடு, நாராயணசாமி கார்டன், கதவு எண் 2/3 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. V. சித்திக் என்பவர் 09.07.2025 நாளிட்ட தனது மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:–

"பெருநகர சென்னை மாநகராட்சி Zone-3, வார்டு–28, மாதவரம், பொன்னியம்மன்மேடு G.N.T. சாலையில் சாலை வெட்டு செய்யப்பட்டு, மேற்கொள்ளப்பட்ட பணி முடிவடைந்து வெகு நாட்கள் ஆகியும் IRC Guidelines படி சாலை வெட்டு தற்போது வரை சரிசெய்யப்படவில்லை.

எனவே 27.06.2025 அன்று நான் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு, இணையவழி புகார் எண் 2025-444NBE பதிவிட்டேன்.

பெருநகர சென்னை மாநகராட்சியின் விதிகளின்படி பணி முடிவடைந்து 2 நாட்களுக்குள் சாலை வெட்டுகள் சரிசெய்யப்பட வேண்டும். தற்போது சாலை பணி முடிந்து 30 நாட்களுக்கு மேலாகியும், சம்பந்தப்பட்ட வார்டு A.E. நடவடிக்கை எடுக்காமல் இருக்கிறார்.

இந்த புகார் மூலம் மனுதாரர் கோரும் பரிகாரம்

(1) புகார் எண் 2025-444NBE–ல் குறிப்பிடப்பட்டுள்ள பகுதியில் ஏற்பட்டுள்ள சாலை வெட்டு IRC Guidelines படி உடன்டியாக சரிசெய்யப்படவேண்டும்.

(2) தரமான சாலை அமைவதை உறுதிப்படுத்த வேண்டும்."

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 24.07.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 3ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது. ஆனால் அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.

3. எனினும், மனுதாரர் மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 17.07.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 29.06.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. விசாரணைக்கு அழைப்பாணை அனுப்பிய பின்னர், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 3 (மாதவரம்)–ன் உதவி ஆணையர், முதுநிலை (மண்டலம்) தனது 16.07.2026 நாளிட்ட கடிதம் ம.அ3. ந.க. எண்அ6/3749/2026–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:–

"09.07.2025 நாளிட்ட பொதுமக்கள் குறைதீர்க்கும் புகார் மனு (1913) வாயிலாக தகவல்கள் கோரியுள்ளீர்கள்.

22.08.2025 நாளிட்ட உதவி பொறியாளர், கோட்டம்–28 அவர்களின் மூலம் இணையதள வழியே பெறப்பட்ட பொதுமக்கள் குறைதீர்க்கும் புகார் மனு எண்ணிற்கு (2025-444NBE) தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது.

மனுதாரர் கோரிய தகவல்கள் அளித்திருப்பினும், 29.06.2026 நாளிட்ட கடிதம் வாயிலாக தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களிடமிருந்து முறையீட்டு மனு பெறப்பட்டதன் அடிப்படையில் தகவல்கள் பின்வருமாறு அளிக்கப்படுகிறது.

| வ. எண் | மனுதாரரால் கோரப்படும் தகவல்கள் | வழங்கப்படும் தகவல்கள் |
|---|---|---|
| (1) | பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–03, வார்டு–28, மாதவரம் பொன்னியம்மன்மேடு G.N.T. சாலையில் சாலை வெட்டு செய்யப்பட்டு, மேற்கொள்ளப்பட்ட பணி முடிவடைந்து வெகு நாட்கள் ஆகியும் IRC Guidelines படி சாலை வெட்டு தற்போது வரை சரிசெய்யப்படவில்லை. | தாங்கள் இணையதள வழியே கோரப்பட்ட புகார் மனுவில் GNT சாலை என குறிப்பிடப்பட்டுள்ளது. GNT சாலையானது தேசிய நெடுஞ்சாலைக்கு சொந்தமானது. ஆனால் புகாரில் இணைக்கப்பட்டுள்ள புகைப் படமானது T.H. Road சாலையாக உள்ளது. அந்த T.H. Road சாலையானது பேருந்து சாலைகள் (Bus Route Road) துறை, பெருநகர சென்னை மாநகராட்சி சார்ந்ததாகும். |
| | எனவே 27.06.2025 அன்று நான் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு, இணையவழி புகார் எண் 2025-444NBE பதிவிட்டேன். பெருநகர சென்னை மாநகராட்சியின் விதிகளின்படி பணி முடிவடைந்து 2 நாட்களுக்குள் சாலை வெட்டுகள் சரிசெய்யப்பட வேண்டும். தற்போது சாலை பணி முடிந்து 30 நாட்களுக்கு மேலாகியும், சம்பந்தப்பட்ட வார்டு A.E. நடவடிக்கை எடுக்காமல் இருக்கிறார். | அச்சாலையில் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்தின் மூலம் கழிவுநீர் பாதாள சாக்கடை அமைக்கும் பணிகள் பேருந்து சாலைகள் துறையிடம் அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது T.H. Road சாலை இணைப்பில் மெட்ரோ ரயில் பணிகள் நடைபெற்று வருகிறது. CMRL பணிகள் முடிவடைந்தபின் அத்துறையிடமிருந்து Completion Certificate பெறப்பட்டவுடன் சாலைவெட்டு சீரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. |

5. மனுதாரர் 17.07.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணைக்கு ஆஜராகவில்லை. மேலும் எவ்வித தகவலும் இம்முறைமன்ற நடுவத்திற்கு தெரிவிக்கவில்லை.

6. எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 3–ன் உதவி செயற்பொறியாளர் மற்றும் இளநிலை பொறியாளர் ஆகியோர் 17.07.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:–

"மனுவில் குறிப்பிட்டுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி Zone-3, வார்டு–28, மாதவரம், பொன்னியம்மன்மேடு G.N.T.சாலையானது தேசிய நெடுஞ்சாலைக்கு சொந்தமானது. ஆனால் புகாரில் இணைக்கப்பட்டுள்ள புகைப்படமானது T.H. Road சாலையாக உள்ளது. இச்சாலையில் தற்போது மெட்ரோ பணிகள் நடைபெறுவதாலும் பெருநகர சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றும் வாரியத்தின் மூலம் பாதாள சாக்கடை அமைக்கும் பணி நடைபெறுவதாலும், அப்பணிகள் முடிவடைந்தவுடன் மெட்ரோ நிறுவனத்தினிடமிருந்தும், பெருநகர சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றும் வாரியத்திடமிருந்தும் N.O.C பெறப்பட்டபின் சாலை வெட்டுப்பணி மேற்கொள்ளப்பட்டு அதன்பின்னர் தரமான சாலை அங்கு அமைக்கப்படும் என்ற விவரத்தினை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்."

எதிர்மனுதாரர் தரப்பில் இதற்கான புகைப்பட நகல்களை விசாரணையின் போது தாக்கல் செய்தனர்.

7. மனுதாரர் மனு மற்றும் எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 3 (மாதவரம்) முதுநிலை உதவி ஆணையரின் அறிக்கை மற்றும் உதவி செயற்பொறியாளர் மற்றும் இளநிலை பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

பெருநகர சென்னை மாநகராட்சி Zone-3, வார்டு–28, மாதவரம், பொன்னியம்மன்மேடு, G.N.T. சாலையில் சாலை வெட்டு செய்யப்பட்டு, மேற்கொள்ளப்பட்ட பணி முடிவடைந்து வெகு நாட்கள் ஆகியும் IRC Guidelines படி சாலை வெட்டு தற்போது வரை சரிசெய்யப்படாததால், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு, இணையவழி புகார் எண் 2025-444NBE பதிவிடப்பட்டது என்பதும், பெருநகர சென்னை மாநகராட்சியின் விதிகளின்படி பணி முடிவடைந்து 2 நாட்களுக்குள் சாலை வெட்டுகள் சரிசெய்யப்பட வேண்டும் என்பதும், சாலை பணி முடிந்து 30 நாட்களுக்கு மேலாகியும், நடவடிக்கை எடுக்காமல் உள்ளதால், மேற்கண்ட சாலை வெட்டு பகுதியினை IRC Guidelines படி உடனடியாக சரிசெய்யப்பட்டு, தரமான சாலை அமைவதை உறுதிப்படுத்த வேண்டும் என கோரியிருப்பது மனுதாரரின் மனு வாயிலாக அறிய முடிகிறது.

மனுவில் குறிப்பிட்டுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி Zone-3, வார்டு–28, மாதவரம், பொன்னியம்மன்மேடு G.N.T. சாலையானது தேசிய நெடுஞ்சாலைக்கு சொந்தமானது என்பதும், புகாரில் இணைக்கப்பட்டுள்ள புகைப்படமானது T.H. Road சாலை என்பதும், இச்சாலையில் தற்போது மெட்ரோ பணிகள் நடைபெறுவதாலும் பெருநகர சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றும் வாரியத்தின் மூலம் பாதாள சாக்கடை அமைக்கும் பணி நடைபெறுவதாலும் அப்பணிகள் முடிவடைந்தவுடன் மெட்ரோ நிறுவனத்திடமிருந்தும், பெருநகர சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர்

அகற்றும் வாரியத்திடமிருந்தும் N.O.C பெறப்பட்டபின் சாலை வெட்டுப்பணி மேற்கொள்ளப்பட்டு அதன்பின்னர் தரமான சாலை அங்கு அமைக்கப்படும் என்பதும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 3 (மாதவரம்) முதுநிலை உதவி ஆணையரின் அறிக்கை, உதவி செயற்பொறியாளர் மற்றும் இளநிலை பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி Zone-3, வார்டு–28, மாதவரம், பொன்னியம்மன்மேடு G.N.T. சாலையானது தேசிய நெடுஞ்சாலைக்கு சொந்தமானது என்றும், புகாரில் இணைக்கப்பட்டுள்ள புகைப்படமானது T.H. Road சாலையான, இச்சாலையில் தற்போது மெட்ரோ பணிகள் நடைபெறுவதாலும் பெருநகர சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றும் வாரியத்தின் மூலம் பாதாள சாக்கடை அமைக்கும் பணி நடைபெறுவதாலும் அப்பணிகள் முடிவடைந்தவுடன் மெட்ரோ நிறுவனத்திடமிருந்தும் பெருநகர சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றும் வாரியத்திடமிருந்தும் N.O.C. பெறப்பட்டபின் சாலை வெட்டுப்பணி மேற்கொள்ளப்பட்டு அதன்பின்னர் தரமான சாலை அங்கு அமைக்கப்படும் என்று பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 3 (மாதவரம்) உதவி செயற்பொறியாளர் மற்றும் இளநிலை பொறியாளர் ஆகியோர் தங்களது வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு, உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 3 (மாதவரம்) முதுநிலை உதவி ஆணையருக்கு அறிவுறுத்துமாறு, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள்11–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. V. சித்திக்,
கதவு எண் 2/3, நாராயணசாமி கார்டன்,
முதல் மெயின் ரோடு, கொடுங்கையூர், சென்னை–600 118.

(2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி
ரிப்பன் மாளிகை, சென்னை 600 003

(3) மண்டல அலுவலர்,
மண்டலம் 3 (மாதவரம்), பெருநகர சென்னை மாநகராட்சி
எண் 1, அமினிட்டி பில்டிங், CMDA டிரக் டெர்மினல் கட்டிட வளாகம்,
சென்னை 600 110.

(4) கண்காணிப்பாளர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
மழைநீர் வடிகால் துறை,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை 600 003.

<u>நகல் :</u>

மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள்
முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்.

இ.கோ / உதிரிகள்.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

14/8/26
செயலாளர்.